அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை:21/2013

எனது இலக்கம்: EST-8/OVERT/04/0106
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07
2013.10.07

அமைச்சின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்கள தலைவர்கள்,

**<u>பொது விடுமுறை தினங்கள் மற்றும் வார இறுதி நாட்களில் பணியாற்றுவதற்காக சில தரங்களுக்கான விடுமுறை தினக் கொடுப்பனவு</u>**

தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. பின்வரும் விதத்தில் 10:1 ஆம் உட்பிரிவில் விதித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைத் திருத்துவதற்கு 2013.09.05 ஆம் திகதியில் நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) நாளொன்றிற்கு எட்டு (08) மணித்தியாலத்துக்குக் குறையாமல் அலுவலர் வேலை செய்ய வேண்டும்.

(ஆ) உரிய திணைக்களத் தலைவரின் முன்கூட்டிய அனுமதியுடன் பஞ்சாங்க மாதம் ஒன்றிற்கு ஆகக் கூடியது இரண்டு (02) நாட்களிற்கு அலுவலர் ஒருவரது சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட முடிவதுடன் அதற்கிணங்க கொடுப்பனவும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(இ) அவசியப்படின் பஞ்சாங்க மாதமொன்றிற்கு இரண்டு (02) நாட்களினை விட மேலான நாட்களிற்கு அலுவலர் ஒருவரின் சேவைகள் உரிய அமைச்சினது செயலாளரின் முன்கூட்டிய தனிப்பட்ட அனுமதியுடன் பெற்றுக்கொள்ளப்பட முடியும் என்பதுடன் அதற்கிணங்க கொடுப்பனவும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

03. உள்ளடங்கும் செலவினமானது மேலதிக நேர மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவிற்காக வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின் மூலம் உரிய அமைச்சுக்கு/திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் எல்லைக்குள் கையாளப்படல் வேண்டும்.

04. இவ் ஏற்பாடுகள் 2013.09.05 ஆம் திகதியிலிருந்து அமுலில் இருக்கும்.

05. பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு